# மக்கள் மறுவாழ்வு

மலர்: 5 | பங்குனி - மார்ச் 1987 | விலை 75 காசுகள் | இதழ்: 6


# வாக்குரிமை மறுப்பு!

## நீலகிரி மாவட்டத்தில் குடியுரிமை பெற்று வாழும் தாயகம் திரும்பியோருக்கு எதிரான அரசியல் சதி!

**இந்திய குடியுரிமை பெற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது நீலகிரி மாவட்டத்தில் குடியேறியுள்ள தாயகம் திரும்பிய மக்களுக்கு வாக்குரிமையை தடுக்கும் திட்டமிட்ட அரசியல் சதி நடக்கிறது.**

இலங்கையில் பிறந்து ஒப்பந்தத்தின் கீழ் இந்திய குடிமக்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டம் 8வது விதியின் கீழ் இந்திய அரசால் பிரகடனப் படுத்தப்பட்டு இந்திய குடிமக்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லா மனித உரிமைகளும் குடியுரிமைச் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவர்களின் வாக்குரிமையை மறுக்கும் கொடுமை நடக்கிறது.

குடியுரிமை பெற்ற இத்தாயகம் திரும்பிய மக்கள் பலர் நீலகிரி பகுதியில் குடியேறியுள்ளனர்; இவர்களுக்கு இந்த கொடுமை நடக்கிறது.

வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. **வாக்காளர்கள் தமது பெயரை சேர்த்துக் கொள்ள மார்ச் 25 வரை கெடு வைக்கப்பட்டிருந்ததல்லவா?**

தீலகிரி, கோத்தகிரி, குன்னூர், கூடலூர் பகுதியில் 40,000 பேருக்கு மேற்பட்ட இத்தாயகம் திரும்பிய மக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை. இதனால் இவர்கள் வாக்கு அளிக்க முடியாது. குடியுரிமையுள்ள இம்மக்களின் வாக்குரிமையை மறுப்பதா?

கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்த்துக் கொள்ள விண்ணப்பிக்கும் பாரங்கள் போதிய அளவு இல்லை. ஆகவே மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் பாரங்களை அச்சிட்டு வழங்கியது. ஆனால் இம்மனுக்களை தாக்கல் செய்த போது, கோத்தகிரி துணை தாசில்தார் பிரபாகரன் ஆயிரக்கணக்கான மனுக்களை நிராகரித்து விட்டார். காரணம் காட்டவில்லை.

மனு செய்தவர்களிடம் உங்கள் கடவுச்சீட்டு, குடும்ப அட்டை ஆகியவற்றை கொண்டு வரவேண்டும் என்று கோரப் பட்டுள்ளனர். இது வன்மையாகக் கண்டிக்கத் தக்க செயலாகும்.

மறுவாழ்வு உதவிகள் வழங்குவதற்கு மேற்படி ஆவணங்களை மறுவாழ்வு அதிகாரிகள் பெற்றுக் கொள்கிறார்கள். பலரது கடவுச்சீட்டு, குடும்ப அட்டைகளை காண்டிராக்ட்காரர்கள் இடைத்தரகர்கள் கொண்டு போய் விடுகிறார்கள். இந்த சூழ்நிலையில் இல்லாத ஆவணங்களை - சான்றுகளை கேட்பது என்ன நியாயம்.

'நாங்கள் இந்தியர்களே' என்றும் கோஷமிட்டும், 'அகதிகள் என்று சொல்லாதே' என்று ஆர்ப்பரித்தும் இந்த அதிகார வர்க்கத்தின் காதுகளில் விழவில்லை போலும்.

அரசாங்க அலுவலக கடிதங்களில் கூட தாயகம் திரும்பியோரை 'அகதிகள்' என்று குறிப்பிடும் பொறுப்பற்ற - அர்த்தமற்றவகையில் குறிப்பிடுகின்றனர். தாயகம் திரும்பியவர்கள், அகதிகள் என்று கருதி அவர்களுக்கு வாக்குரிமை வழங்க மறுக்கின்றனர்.

தாயகம் திரும்பியோர் வேறு அகதிகள் வேறு என்பதை தமிழக அரசு அதிகாரிகள் என்று உணரப்போகிறார்கள்? என்று வாக்குரிமையுள்ள தாயகம் திரும்பிய மக்கள் கேட்கிறார்கள்.

மலையக மக்கள் மறுவாழ்வு மன்ற செயலாளர் திரு. ஆர். ஆர். சிவலிங்கம் அவர்கள், தமிழக அரசின் துணை பிரதம தேர்தல் அதிகாரி தேவராஜ் அவர்களை சந்தித்து இந்த பிரச்சனையை எடுத்துரைத்தார்,

அவர் உடனடியாக நீலகிரி மாவட்டத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்; இந்திய குடிமகனாக இருக்கும் காரணத்தால் அவர்களது மனுக்களை நிராகரிக்கக் கூடாது என்றும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். தவறாக நிராகரித்துள்ள மனுக்களை மீளாய்வு - ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இவர் எடுத்த உடனடி நடவடிக்கைக்கு மக்கள் மறுவாழ்வு மன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

தாயகம் திரும்பியோர்களுக்கு எதிராக மறுவாழ்வு உரிமைகள் மறுக்கப்படுவது போல நீலகிரி மாவட்டத்தில் வாக்குரிமையையும் பறிக்க அரசியல் சதி நடக்கிறது என்று தாயகம் திரும்பிய மக்கள் ஐயம் அடைகின்றனர். .:.

மக்கள் மறுவாழ்வு

மலர்; 5 பங்குனி-மார்ச் '87 இதழ்: 6

## தமிழர் வாழ்வு தாழ்ந்து போகும்!

இலங்கைப் பிரச்சனை மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. பேச்சு வார்த்தை எல்லாம் பிசுபிசுத்துப் போய் இன்றைக்கு இலங்கை அரசு தனது உள்நாட்டு மக்கள் மீதே பொருளாதாரத் நெருக்கடியை கொண்டு வந்துள்ளது குப்புற வீழ்ந்தவன் மீது மாடு ஏறி மிதித்த கதையாய் பொருளாதார நெருக்கடியை கொண்டு வந்ததோடு மாத்திரமல்ல; யாழ்ப்பாண மக்கள் மீது மும்முனை தாக்குதல்களைத் தொடுத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இராணுவத்தினரின் தாக்குதல்களாலும் - பட்டினியிலும் கூட - மரணத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் இராணுவத்திற்கு அஞ்சி, வீடுவாசலை விட்டு காடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்; அசதிகளாக முகாம்களில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள்

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசம் அடைந்து அங்குவாழ் தமிழினமே பூண்டோடு வீழும் அபாய நிலையில், ஏதேனும் உடனடியான நடவடிக்கையை சம்பந்தப்பட்டவாகள் மேற்கொள்ள வேண்டும்.

உண்ணா விரதத்தாலும் ஊர்வலத்தாலும் இது வரை காலத்தில் ஒன்றும் செய்துவிட முடியவில்லை. கண்டனக்கணைகளும் அறிக்கைளும தந்திகளும் எதையும் சாதித்து விடவில்லை-

இந்திய அரசின் பேச்சு வார்த்தைகள், கவலைகள்' சமீபகாலத்தில் இதன் கொஞ்சம் உரத்த குரலில்' விட்ட கண்டனமும் எந்த முடிவையும் கண்டுவிடவில்லை.

இந்த நிலையிலேயே சம்பந்தப்பட்டவர்கள் வாளாதிருப்பது இலங்கை அரசின் அட்டூழியங்களுக்கு மேலும் ஊக்கம் கொடுத்ததாகும். ஈழமக்கள் வாழ்வுக்கும் கட்டியம் கூறுவதாகும்.

இந்திய அரசினால்தான் இந்த பிரச்சினைக்கு முடிவுகட்ட முடியும் என்ற நிலையில் இந்திய அரசு உடனடியாக ஏதேனும் வழியை கண்டு பிடித்தாக வேண்டும்.

இந்திய அரசுக்குள்ள கடமையை உணர்த்துவதற் இந்தப் பிரச்சனையில் ஈடுபடவைப்பதற்கும் உரிய கடமை தமிழக அரசைப் பொறுத்ததாகும்.

தமிழர் நலனுக்கு ஊந்தகம் விளைந்தால் அதைத் தட்டிக்கேட்கவும், தக்கநடவடிக்கைஎடுக்கவேண்டியது தமிழக அரசின் கடமையாகும்.

அந்த கடமையை தமிழக அரசு உணரவேண்டும் உணராவிட்டால் தமிழர் வாழ்வு தாழ்ந்தும் போகும்! ○

## வேண்டாம் என்ற கடனை ஆளில்லாமலே ஏப்பம் விட்டனர்!

வீட்டுக்கடன் வேண்டாம் என்று எழுதிக்கொடுத்தவர்களுக்கு வீட்டுக்கடன் வழங்கப்பட்டிருக்கிறது. சம்பந்தபட்டவர் இல்லாமலே கடன்பெற்ற இடைத்தரகரின் திருவிளையாடல் அம்பலம் ஆகியிருக்கிறது.

வி, சுப்பிரமணியம், வி. அன்பழகன் ஆகிய தாயகம் திரும்பியவர்கள் இருவர். இருவரும் சகோதரர்கள்.

இவர்கள் புதுக்கோட்டை தனித்துணை ஆட்சியாளரிடம் வீட்டுக்கடனுக்கு மனுசெய்திருந்தனர் — இம்மனுவை சுப்பையா என்ற காண்டிராக்காரர் மூலம் செய்திருந்தனர், கடன்கட்டுஎண் முறையே HLO 614/81-82. HLO 615. 81/82.

இவர்கள் வேலை வாய்ப்புக்காக ஆந்திர பிரதேசம் சென்றனர் அங்கு விசாகப்பட்டினம் மாவட்டத்தில் சிந்தாபள்ளி வட்டத்திலுள்ள கே. வி. நகரிலுள்ள எல்லவாசம் காப்பித் தோட்டத்தில் வேலைக்குக் சேர்ந்தனர்.

இங்கு வேலையில் சேர்ந்ததால் வீட்டுக்கடன் வேண்டாம் என்ன புதுக்கோட்டையில் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குமனு எழுதிக்கொடுத்து விட்டனர்.

சமீபத்தில் இவர்களுக்கு குடும்பஅட்டை தேவைப்பட்டதால் மேற்படி அலுவலகத்து தொடர்பு கொண்டார்.

அப்போது தான் அவர்களுக்கு தெரிய வந்தது தங்கள் பெயரில் தாங்கள் இல்லாமலே வீட்டுக்கடன் பெறப்பட்டிருப்பது. தலா ரூபா 4200/- கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடன்கட்டுகளை ஆராய்ந்து பார்த்த போது, அவர்கள் கடன் வேண்டாம் என்று எழுதிக்கொடுத்த கடிதமும் அங்கு இருக்கிறது. ஆயினும் மனுதாரர்கள் வேண்டாம் என்ற கடனை ஆளில்லாமலே விழுங்கிய இந்த பிரச்சனையையிட்டு யூ எப் எப் ஆர் புதுக்கோட்டை கிளை அமைப்பாளர் திரு கதிரேசன் நட வடிக்கை எடுத்து வருகிறார். ○

## எங்கள் வாழ்வு

### செல்வம்

விதி எனும் சுழலில் சிக்கி
வேறொரு நாடு சென்று
இன்னல்கள் பலவும் பெற்று
எளியராய் வந்து விட்டோம்
கண்ணிருந்தும் குருடர் போல
கருத்துக்கள் இழந்த தாலே
வெள்ளையர் பின்னால் சென்று
வேதனை யாவும் பெற்று
அந்நியர் நாட்டை நாங்கள்
அழகுற அமைத்து விட்டு
எண்ணிலா துயரின் பின்னே
மீண்டும் தாய்நாடு வந்தோம்
சுற்றமும் சுகமும் காண
சுதந்தரத் தமிழ் நாடேகி
மட்டிலா உவகை யோடு
மறுவாழ்வு காணச் சென்றோம்
கண்டதெல்லாம் கனவுகளே
கண்விழித்தால் வெறுமைகளே!

# பொறுப்பற்றவர்கள் கொடுத்த பொய்யான தகவல்

தாயகம் திரும்பியோர் வங்கி ஊழல் குறித்து ஜூனியர் விகடனில் வெளிவந்த செய்திக்கு இயக்குனர் ஆர். எம். லிங்கம் அவர்களிமிருந்து வரப்பெற்ற பதில் இது.

தங்களின் ஜூனியர் விகடன் 21-1-87ல் நாளிட்ட இதழில் 'இதுவா புனர்வாழ்வு' எனும் தலைப்பில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வழியாக அளிக்கப்படும் மறுவாழ்வு திட்ட செயல்முறைகளில் பல வேறுபட்ட ஊழல்கள் நடந்திருப்பதாக எழுதியுள்ளீர்கள்.

அது எந்த அளவு உண்மை என்பதை வங்கியின் மேலாண்மை இயக்குனர் தங்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார் என்று நம்புகிறேன்.

வங்கியைப் பற்றி மட்டும் எழுதாமல் தென் மாநிலங்களில் உள்ள அகதிகளால் தேர்தெடுக்கப் பெற்ற வங்கி டைரக்டர்களால், அகதிகள் சார்பில் இயக்குனராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள என்னைப் பற்றியும் அந்தக் கட்டுரையில் இணைத்து எழுதியுள்ளீர்கள்.

எவர் எவரையோ சிரமம் எடுத்து தொலைதூரம் சென்று சந்தித்த தாங்கள் உங்கள் அருகில் வாழ்ந்து வரும் என்னைச் சந்திக்க எண்ணவில்லை! ஏன் எனக்குப் புரியும்!

இருப்பினும்; தாங்கள் கட்டுரையில் எழுதியுள்ள என் தொடர்புள்ளசெய்திக்கு விளக்கமளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். பிரசுரித்து, பத்திரிகை தர்மத்தை வளர்த்த தாயாகிய ஆனந்த விகடனின் பெருமையை ஜூனியர் விகடன் நிலை நாட்ட வேண்டுகிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நேரத்தில் வங்கியின் தலைவராக திரு. யூ. எஸ். நடராசன், ஐ. ஏ எஸ். அவர்களும் இயக்குநராக திரு S. குருமூர்த்தி ஐ ஏ எஸ். அவர்களும் இருந்து வந்தார்கள்.

## உரிமை மறுக்கப்பட்டது

நிர்வாகத்துடன் பாராளுமன்றக்குழு ஆய்வுரையாடல் நிகழ்த்திய போது அக்குழுவின் ஆய்வுரையாடலில் கலந்து கொள்ள தாயகம் திரும்பியோர் சார்பில் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள டைரக்டராகிய எனக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று வங்கி தலைவர் நிர்வாக இயக்குநரிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் வாய்ப்பு அளிக்கவில்லை.

பாராளுமன்றக் குழுவிற்கு ஹோட்டல் சோழாவில் விருந்துபசரிப்பு அளித்த பொழுது நானும் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது

அப்பொழுது பாராளுமன்றக் குழுவிடம் வங்கி நிலைமையை விளக்கினேன். விரல் நுனியில் பதில் அளிக்கும் நீங்கள் ஏன், நாங்கள் ஆய்வுக்கு வந்தபொழுது கலந்து கொள்ளவில்லை என்றுவினவினார்கள். என்னை தலைவரும் இயக்குநரும் அனுமதிக்க மறுத்த செயலைக்கூறினேன். வியப்படைந்தார்கள்!

நிலைமைகள் இவ்வாறு இருக்கும் பொழுது என் மீது குற்றம் சுமத்தி எழுதியுள்ளது தவறு என்று கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டுள்ளேன். தகவல் தந்தவரின் சாணக்கியன் திறமைக்கு தாங்களும் ஆளாக்கப் பட்டுள்ளீர்கள் என்று கருதுகிறேன். எனவே; என் மீது சுமத்தப்பட்டுள்ள வீண் பழியைத் துடைத்திட வேண்டுகிறேன்.

சிமெண்ட் ஊழல் வழக்கில் சம்மந்தப் பட்டிருப்பதாகவும், அப்படிப் பட்டவர் எப்படி இயக்குநர் குழுவில் இருந்து வரலாம் என்பது போல் சம்மந்தமில்லாமல் என்னை பிரச்சனைக்குள்ளாக்கியுள்ளீர்கள்.

நான் அது தொடர்பாக விசாரிக்கப்பட்டேன். ஊழலில் சம்மந்தப் பட்டவனாகவோ குற்றம் புரிந்தவனாகவோ என்னை முடிவுசெய்யவும் இல்லை;

(4-ம் பக்கம் பார்க்க)




## எங்கள் பெருமூச்சு என்று தணியுமோ

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும வளர்ச்சி வங்கி யாருக்காக? எதற்காக? எந்த நோக்கத்திற்காக? எந்த சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது?

மேற்படி வங்கி எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இதுவரை அந்த வங்கியால் உண்மையிலேயே இழந்த வாழ்வை திரும்ப பெற்றவர்கள் எத்தனை பேர்? எவ்வளவு செலவு செய்யப்பட்டது? 'வங்கியால் தொழிற்சாலைகளுக்கு விற்கப் பட்டவர்களின் நிலை என்ன? அவர்கள் தொழில் திருப்திகரமாக அமைந்ததா? அல்லது அமையவில்லையா? அப்படி தொழில் திருப்திகரமாக அமையாததன் காரணம் என்ன? இலங்கையில் இருந்த அவர்களின் பூர்வீக நிலை என்ன? காலத்தின் விதியால் அகதிகளாக்கப்பட்டு அல்லல்படும் அகதிகளுக்கு இத்தனை கேள்விகளுக்கும் மனசாட்சி உள்ள ஒரு அதிகாரி விடைகாணவும் நடந்த தவறுகளை திருத்தி அமைக்கப்பட முயற்சி செய்வோமேயானால்......

தாயகம் திரும்பியோர்கள் இனி திரும்பவிருக்கிறவர்களுக்கு எதிர்காலம் பொற்காலமாக அமைய செய்யப்புள்ளது. இந்திய பணத்தை வீண் விரையம் செய்யாமலும் ஒரு பொறுப்பான முறையில் ஒரு ஏழைக்கு, அகதிக்கு பாப் சேர்ந்த திருப்தியாவது அமையும், இல்லையேல் தாயகம் திரும்பியோரின் ஏக்கப் பெருமூச்சு தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். இது எந்த ஒரு மனசாட்சி உள்ள ஜீவனும் மறுக்க முடியாத ஒன்று!

எஸ் எம். வேலு
அண்ணா நகர்
மல்லங்கிணறு.

## வங்கிப் பேரவைக் கூட்டம்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதித்துவ பேரவையின் 11வது கூட்டம் 6-3-87 அன்று சென்னை 'தாஷப் பிரகாஷ்' ஹோட்டலில் நடைபெறவிருக்கிறது. 0

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை தரவும் இல்லை. மேலும் இயக்குநர் குழுவில் நான் இடம் பெற தகுதியுள்ளவனா! அல்லாதவனா! என்பது சட்ட திட்டங்களைச் சரியாகப் பார்த்தப் பின்னர் தான் மத்திய அரசு எனது நியமனத்தை உறுதி செய்து புதுப்பிக்கிறது.

தாங்களோ, பொறாமையின் விளைவால் பொறுப்பற்றவர் கொடுத்த பொய்யான தகவலை நம்பி, தாயகம் திரும்பியோர் சார்பில் மூவர் சார்பு இயக்குநர்களாக இருக்கவேண்டும் என்னும் வங்கி விதிமுறையை அமல்படுத்தாமல் இருந்த நிலையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திப் பிரதிநிதித்துவம் பெற்றவர்களால் ஒரே சார்பு இயக்குநராக தேர்ந்தெடுக்க பெற்றுள்ள என்னை அவமானப்படுத்தியுள்ளது வருந்தத்தக்கது.

மேலும், நான் இயக்குநர் குழுவில் அங்கம் பெற தகுதி அற்றவன் என்றால் என்னைத் தேர்ந்தெடுத்தனுப்பிய டெலிகேட்டுகள் லேசுப்பட்டவர்கள் அல்ல. பதவியைப் பறித்து விரட்டி இருப்பார்கள். இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்து அமர விட்டிருக்க மாட்டார்கள்.

வங்கி தொடங்கிய காலத்தில் இருந்து நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்திய பல நிர்வாக இயக்குநர்களிலே; துயரத்தால் அகதிகள் வடிக்கும் கண்ணீரை தான் வடிக்கும் கண்ணீராகப் பாவித்து மனிதாபிமான நோக்குடன் நல்லெண்ணம் வைத்து அவர்களின் சிறிய பிரச்சனைகளைக் கூட உடலுக்குடன் கவனித்து ஏற்றவகையில் அகதிகள் துயர் துடைத்தவர், ஆறுதல் கூறியவர் நிர்வாக இயக்குநர் திரு. ஏ. சுந்தரராஜ் ஐ. ஏ. எஸ். அவர்கள் ஆவார்.

இயக்குநர் திரு. ஏ. எம் சுந்தரராஜ் ஐ ஏ. எஸ் அவர்களை அகதிகளின் தெய்வமாக மதித்துப்போற்றி வருகிறார்கள்.

சிறந்த திறமை மிக்க அதிகாரிகள் பத்திரிகைகளை ஊக்குவிக்க வேண்டும் தைரியமாக செயல்பட்டு புனர்வாழ்வு திட்டங்களை நிறைவேற்றுபவர்களை அதிகாரத்தை துஷ்பிரயோகம், ஊழல் செய்து விட்டவர்கள் போன்ற தோற்றத்தை உருவாக்குவது நியாயமான செயல் அல்ல.

இப்படியே நாம் குறிப்பிட்டு தொடர்ந்தால் பொறுப்புள்ள அதிகாரிகள் நமக்கு ஏன் இப்படிப்பட்ட ' வம்பு என்று எண்ணி, கடிகாரத்தையும், காலண்டரையும் பார்த்து நாட்களைத் தள்ளி விடுவார்கள். அதனால் அரசும் மக்களும் பயன் பெறமுடியாது என்பது தாங்கள் அறியாதது அல்ல.

உண்மை நிலையை ஜுனியர் விகடவின் தரமிக்க வாசகர்கள் அறிந்து கொள்ளவும் என் மீது பூசப்பட்டுள்ள களங்கச் சேற்றை அகற்றவும் இதனை அவசியம் பிரசுரித்து உதவ வேண்டுகிறேன்.

ஆர் எம் லிங்கம்

இயக்குனர்,
தா.தி.கூ.வங்கி
சென்னை.

# மக்கள் மறுவாழ்வு மன்றம்-புதிய கிளைகள்

நீலகிரி, கோத்தகிரி மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் புதிய கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு

## மாதா நகர் ஆவுக்கல்

தலைவர் : பி. என். பாண்டியன், உப தலைவர்: வீ. செல்லையா, செயலாளர் : எஸ். மாணிக்கம், துணைச் செயலாளர்: ஆர். சங்கிலி, பொருளாளர்: எஸ். கே. ராமையா,.

செயற்குழு உறுப்பினர்கள்

கே. முருகன் பீ. நல்லதம்பி' எம். சந்திரன் கே. கணேசன், கண்ணுசாமி, பீ பிச்சை, பீ· முத்துசாமி, ஆர். மருதை, ஏ. குணசேகர், எஸ். நல்லதம்பி ஆர். பெருமாள், எம் நல்லதம்பி, ஜீ. ரத்தினம் பீ. பழனியாண்டி, எஸ். பழனிவேல், ஆசைத்தம்பி எஸ் செல்வராசன், வீ. கோவிந்தன், வி வெள்ளையன், விஸ்வநாதன்.

## சேலாடா கீரக்கல் அரவேணு

தலைவர்: திரு. மாயகிருஷ்ணன். உப தலைவர் திரு பீ பழனியாண்டி, செயலாளர்: திரு வி. செல்லையா, துணைச் செயலாளர்: திரு. கே. தருமராஜ், பொருளாளர் திரு. கே, ராக்கப்பன்.

செயற்குழு உறுப்பினர்கள்:
திருவாளர்கள்; ஆர். செல்வம். எஸ், சதாசிவம், ஆர். சந்திரன், ஆர், கணேசன், ஆர் இராஜேந்திரன், எஸ். மகேஸ்வரன், ஆர். சுதாகரன், ஆர். தேவராஜ், எஸ். சிவஞானம் எஸ். கணேசன், கே. ஆறுமுகம், பொன்னுசாமி, என். காளிரத்தினம், ஆர். சுப்பிரமணி, கே. சந்தானம், என். மருதை, பி. இராமையா, கே. கோபால், அய்யாவு. கே. செல்வராஜ்,

## அம்பாள் காலனி கீழ்கோத்தகிரி

தலைவர்: திரு. எஸ், இராமலிங்கம். உபதலைவர் : திரு. எம். எஸ். பழனிசாமி, செயலாளர்: திரு செல்வரத்தினம், பொருளாளர்: திரு. சந்திரசேகர்,

செயற்குழு உறுப்பினர்கள். திருவாளர்கள் டி சிவனு, என், செல்வராஜ், ஏ. பெருமாள், பி பழனியாண்டி, பி. நல்லுசாமி கே. பெருமாள், டி. திருப்பதி எம். பாலு, எம். பெருமாள், கே. மாரிமுத்து, பி. எஸ், இராமர், எஸ். இராமையா, எம். முனுசாமி, எம். இராமகிருஷ்ணன்,

## பாக்கிய நகர் கட்டபெட்டு

தலைவர் : வீ மணி, உப தலைவர்: ஈ. ரவி. செயலாளர் : ஆர். செல்வம், பொருளாளர் : பீ. சதாசிவம்.

செயற்குழு உறுப்பினர்கள்-
ஈ ராஜன் எம். ரகுபதி யூ. லோகு ஆர். முருகையா எம். ஜெயராஜ் சோமு, ராஜேந்திரன். காந்தி, ரமேஸ், எம். செல்வம், எம். ஆசைத்தம்பி, பீ. பெரியதம்பி, பரமசிவம்,. எம். தர்மலிங்கம் பீ. பாலு, ஆர். விஸ்வநாதன்.

## பேர்வழி தோட்டம் கட்டாடா

தலைவர்: பீ. ராமையா. உப தலைவர்: கே, ராஜகோபால், செயலாளர்: ஜீ. செல்வராஜ், துணைச் செயலாளர்: பழனிவேல், பொருளாளர்: எஸ், மூர்த்தி,

செயற்குழு உறுப்பினர்கள்.
கோவிந்தன் கே. பழனிவேல் எம். கந்தசாமி, கே சிவசாமி, வீ. கருப்புசாமி, எஸ். ராமநாதன், கே சுப்பையா, என், சொக்கலிங்கம், கே. ரெங்கசாமி கே. நடராஜ், எஸ். மகேந்திரன் ஆர், பெரியசாமி, அப்புசாமி, மாரன், சிதம்பரம், கே, கிட்ணசாமி. அண்ணாதுரை, சிவா, பழனி, சடையன். O

## 20 அம்சத் திட்டம்

தொடர்ச்சி
அடுத்த இதழில்
இடம் பெறும்

# தாயகம் திரும்பிய மக்களைத் தமிழக சமுதாயத்தோடு ஐக்கியப்படுத்துவது எப்படி?

**'டெக்ராஸ்' நடத்திய போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை, கட்டுரையாளர் தெரிவித்துள்ள கருத்தையொட்டி தங்கள் கருத்துகள் வரவேற்கப்படுகிறது.**

**- ஆசிரியர்**

தாயகம் திரும்பிய மக்களை தமிழ் சமுதாயத்தோடு ஐக்கியப் படுத்துவது எப்படி? என்ற கேள்வி, ஒரு நல்ல கேள்வி. இது அட்டவணைப் போட்டுக்கொண்டு பூர்த்திசெய்ய முடிகிற பிரச்சனையல்ல இதற்கான அடிப்படையை, சம்பந்தப்பட்ட மக்களின் கடந்த காலப்பின்னணியோடும்மனோநிலைகளோடும் அணுக வேண்டியுள்ளது. ஏனெனில், இலங்கையிலிருந்து இந்த மலையக மக்கள் 'தாயகம்' திரும்பத் தொடங்கி (1968ம் ஆண்டு முதல்) இப்போது 19 வருடங்கள் கழிந்துபோய்விட்டன. இவர்களில் முதல் ஆண்டு தாயகம் திரும்பியவாகளையும் இப்போது கடைசியாய் வந்து சேர்ந்துள்ளவர்களையும் மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொண்டால் பெரிய வித்தியாசங்களாக எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. இன்னும் அந்த இலங்கை மண்ணின் கனவுகள் மாறாத, கடந்த கால வாழ்வின் ஏக்கங்கள் சூழ்ந்த ஒரு மனிதக் கூட்டமாகவே இவர்களைப் பார்க்க முடிகிறது.

அப்படியென்றால், இதன் அர்த்தம்தான் என்ன ?

இதற்கு பதிலாக, 150 ஆண்டுகளைக் கொண்ட அந்த மக்களின் வரலாறே உள்ளது. இவற்றை நாம் கவனத்தில் எடுத்துக்கொண்டாக வேண்டும்.

**இவர்களின் மொழியும் காலச்சாரமும் தமிழ்நாட்டு வயப்பட்டதே எனினும், வாழ நேர்ந்த** மண்ணும் தொழில்முறைகளும் வெவ்வேறானவை. இவர்களில் பெரும்பகுதியினர் இலங்கையின் பெருந்தோட்டப்பயிரான தேயிலைத்தொழிலோடும் இரப்பர் தோட்டங்களோடும் கலந்து போன தொழிலாளர்கள். தொழிலாளர் என்ற வர்க்க உணர்வின் கீழ் ஒன்றுபட்டவர்கள். நிரந்தரமான தொழிலும் வருமானமும் உள்ளவர்கள். இவர்களின் பலமும் பலவீனமுமாக தொழிற் சங்கங்கள் இருந்து வந்தன.

இவர்கள் அந்த மண்ணில் மகத்தான சக்திமிக்க ஒரு தொழிலாளர் வர்க்கமாக இருந்தபோதிலும் அரசியல், நிர்வாகம் போன்றவற்றில் இவர்கள் பங்கு மறுக்கப்பட்டவர்கள். இவர்களுக்கிருந்த அதிகப்பட்ச உரிமையெல்லாம் தொழிற்சங்கப் போராட்டங்கள் மட்டுமே. மற்றபடி இவர்களின் உலகம், தொடர்புகள் அனைத்தும் அந்தந்த தேயிலைத் தோட்டங்களுக்கு உட்பட்டவையே. கண்ணியமற்ற அரசியல், ஊழல் மிக்க நிர்வாகம் போன்றவைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவசியம் இவர்களுக்கு அந்த மண்ணில் வெகு சொற்பமே.

இங்கு, இந்த நாட்டில் ராமேஸ்வரத்தில் காலடி வைக்கும் போதே தாம் கனவுகளில் கூட கண்டிராத பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்து விடுகிறது. முதல் அனுபவமே கசப்பாகிவிடுகிறது. அப்புறம் கடைசிவரையிலும் அதுவே தொடரவும் செய்கிறது. அதிகாரிகளின் கெடுபிடிகள் காண்ட்ராக்டர்களின் கொள்ளைகள், பூர்வீக கிராமத்தில் ஏற்படும் சொத்து, சடங்குகள் முதலியவற்றின் பாதிப்புகள், குறைபாடுகள் மிகுந்த அரசுத் திட்டங்கள் அனைத்தும் வெறுப்பிலும் விரக்தியிலும் இவர்களைத்தள்ளிவிடுகின்றன நிரந்தர வருவானமின்மை, அறியாத தொழில் என்று சகலமும் பிரச்சனையாகி விடுகின்றன. இந்த சூழலில் இந்த மக்கள் தம்மிலிருந்தே தாம் அந்நியமாகிப் போகும் நிலை தவிர்க்க முடியாததாகிவிடுகிறது, அதே வேளையில், தேயிலைத் தோட்டங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துப் போனவர்கள். இங்கும் ஒரு குறைந்தபட்ச 'மலையகத்தை' உருவாக்கிக் கொண்டு விடுகின்றனர். சீதோஷ்ணம், தேயிலைத் தொழில், குடியிருப்பு வசதிகள் போன்றவை இன்னும் அந்த இலங்கையை மறக்க முடியாமல் செய்து கொண்டிருக்கின்றன. இவர்களைத் தவிர வெளிமாநிலங்களுக்கும், கூட்டுறவுப் பண்ணைகளுக்கும் நூற்பாலைகளுக்கும் கிராமங்களுக்கும் போனவர்களில் வெகு சிலரைத் தவிர மற்றவர்கள் வாழ்க்கையை இன்னும் நிலை நிறுத்திக் கொள்ள முடியாதவர்களே.

சி. பன்னீர்செல்வம்

அப்படி என்றால், இந்த 'தாயகம்' திரும்பிய மக்கள் தமிழ் சமுதாயத்தோடு ஐக்கியப்பட முடியாதவர்களா?

ஐக்கியப்பட முடியும், ஐக்கியப்பட்டாக வேண்டும் என்பது தான் இதற்குப்பதில்.

'நண்டு திங்கிற ஊருக்குப் போனால் நடுத்துண்டு நமக்கின்னு எடுத்துக்கிறணும்' என்று தமிழ் சமுதாயத்தோடு கலந்து போனவர்களும் இந்த தேசத்து சமூக அரசியல் பொருளாதார ஊற்றுக்களோடு கலந்து போனவர்களும் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் வெகு சொற்ப எண்ணிக்கையே,

இரண்டு தேசங்களின் ஒப்பந்தங்களும் வாக்குறுதிகளும் இலங்கை இனவாத அரசின் தொடர்ச்சியான தாக்குதல்களுமே இவர்களில் பெரும் பகுதியினரை இந்தியப் பிரஜைகளாக, 'தாயகம் திரும்பியவர்களாக' இவர்களை மாற்றியுள்ள இவர்கள் இந்த மண்ணில் தங்கள் சொந்தக்கால்களில் நிற்கிற காலம் வரும்வரை இவர்களின் மனோநிலையில் அதிக மாற்றத்தை காணமுடியாது, அதே வேளையில் நிலப் பரப்பிலும் ஜனத்தொகையிலும் பரந்த பூமியில், ஏழ்மையும் வறுமையும் மிகுந்த மக்கள் திரள்களுக்கிடையில் இந்த 'தாயகம்' திரும்பிய மக்கள் மட்டும் தங்கள் வாழ்க்கையை நிலை நிறுத்திக்கொள்ள முடியாது. இந்த தேசத்தின் பெருவாரியான மக்களின் பிரச்சனை தீர்க்கப்படும்போதுதான் தமது பிரச்சனையும் தீர்க்கப்பட முடியும் என்பதை உணர்ந்தாக வேண்டும், காலம் பூராவும் 'லோன்' களுக்காகவே இவர்கள் அலைந்து திரிய முடியாது.

எது எப்படி இருப்பினும் இந்த 'தாயகம்' திரும்பிய மக்கள், தங்களை தமிழ் சமுதாயத்தோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளுதல் சாத்தியமே. இதற்கு சாதகமாகப் பின் வரும் அம்சங்கள் உள்ளன :-

1. இந்த 'தாயகம்' திரும்பிய மக்கள், இங்கிருந்து சென்ற தலைமுறைகளும் அதனது தொடர்ச்சியுமாவர்.

2. இவர்களின் மொழி, கலாச்சாரங்களில் சிறு வித்தியாசங்கள் இருப்பினும் வெகு எளிதாக மாறக்கூடியவையே.

3. இவர்கள் எப்படியும் இங்கேதான் வாழ்ந்தாக வேண்டும்,

இந்த சாத்தியப்பாட்டை கவனத்தில் எடுத்துக்கொண்டு செயல்படுதலை, இந்த மக்களுடன் சம்பந்தப்பட்ட அறிவு ஜீவிகளும், இவர்கள் மத்தியில் வேலை செய்யும் அமைப்புகளும் ஏற்க வேண்டும். காலம் பூராவும் 'தாயகம் திரும்பியவர்கள்' என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே முடங்கிவிடக் கூடாது. இந்த தேசத்து மக்களின் சகல பிரச்சனைகளும்

(8-ம் பக்கம் பார்க்க)

# பெண்களின் இன்றைய நி

## புள்ளி விபரங்கள் காட்டும் உண்மை

"ஆண்களும், பெண்களும் சமமாக இல்லையா என்பதைப் பற்றி சிந்திப்பதில் நாங்கள் நேரத்தை செலவிடவில்லை. ஆனால் ராணுவப்பயிற்சி முகாம்களிலும், போர்களத்திலும் ஆண்களுக்கு நாங்கள் நிகரானவர்கள் என்பதைக் காட்டினோம்.

"பெண்களாகிய நாங்கள் எங்களது நாட்டில் புரட்சி இயக்கத்திற்கு தலைவிகளாகவும் தளபதிகளாகவும் செயல்பட்டோம்"

இது நிக்கராகுவாவைச் சேர்ந்த மகளிர் இயக்கத் தலைவி மாகா என்றிகஸ்ஸின் கூற்று.

இது ஆங்காங்கே பெண்கள் அடக்கு முறைக்கும், ஒடுக்கு முறைக்கும்-அடிமைத்தனத்திற்கும் மீறி பெற்ற எழுச்சி என்றாலும் இன்னும் பெண்கள் நிலை மிகப் பின் தங்கியே இருக்கிறது.

இன்னமும் அவர்கள் வீட்டுக்குள்ளே பூட்டிவைக்கும் பொருட்களாக, போகப்பொருட்களாக ஒதுக்கப்பட்ட பதுமைகளாகவே கருதப்பட்டு வருகிறார்கள்.

பெண் பிறந்து விட்டாலே அவர்களை 'செலவினத்தை' சேர்ந்தவர்களாக கருதி விடுகிறார்கள் ஆண் குழந்தைகளுக்கு காட்டும் பரிவும், பாசமும் இவர்களுக்கு காட்டுவதில்லை; இவர்களது உடல் நலத்தில், ஆரோக்கியத்தில், ஆடை, அணிகலனில் அக்கறைக்காட்டுவதில்லை.

ஆண் பிள்ளை உடல் மெலிந்திருந்தால்அவனுக்கு மருந்தும்,டானிக்கும்,உயிர்ச்சத்தும், ஹார்லிக்ஸும் என்று வேளைக் கொன்று கொடுத்து கவனிக்கப்படும். பெண்பிள்ளைகள் விஷயத்தில் இது கவனிக்கப் படுவதில்லை.

## மரணம்

உண்டிக் சுருங்கல் பெண்டிற்கு அழகு; பெண்கள் அபரிமிதமாக சாப்பிடக்கூடாது என்ற எண்ணங்களில் -இவள் என்ன சாதிக்கப் போகிறாள், இன்னொரு வீட்டுக்கு போகிறவள் தானே என்ற அலட்சியம்

பெண் குழந்தைகள் மீது காட்டப்படும் இந்த அலட்சியத்தால் ஆண்களை விட அதிகமாக மரணமடைகிறார்கள். ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளுக்கு நோய்களை எதிர்க்கும் சக்தி அதிகம் உண்டு ஆனால் இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 934 பெண்கள் உள்ளனர் காரணம் பெண் குழந்தைகட்டுப்போதிய சத்துணவு தரப்படுவதில்லை. எனவே சத்தற்ற உணவு மற்றும் பலவீனத்தின் காரணமாக இறக்கும் குழந்தைகள் (0-5 வயது) ஆண்கள் 18-8 சதவிகிதம். பெண்களோ 25.5 சதவீதமாகும் இது புள்ளி விபரம் காட்டும் உண்மை.

## ஆயுட்காலம்

இவர்களது ஆயுட்காலம் குறித்து புள்ளி விபரம் காட்டும் உண்மை, இந்தியாவில் பெண்கள் நிலையைக் காட்டுகிறது'.

வெளிநாடுகளில் பெண்களின் சராசரி ஆயுள்காலம் ஆண்களை விட அதிகம் நம் நாட்டிலோ 57 வயது என கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் 50 வயதே வாழ்கின்றனர் என்று புள்ளி விபரம் தயாரிப்போர் தெரிவிக்கின்றனர்.

## விபத்துகளில்

அவர்கள் 50 வயது வரை தான் இங்கு வாழ்கிறார்கள் என்பது ஒருபுரமிருக்க விபத்துக்களிலும் இவர்கள் தான் அதிகமாக இறக்கிறார்கள்.

ஒரு புள்ளி விபரம் என்ன கூறுகிறது — ஆண்களை விட பெண்கள் 10 மடங்கு அதிகமாக எரி விபத்துகட்டு உட்படுகின்றனர். விபத்துக்குட்படுவோர்களில் 100 பெண்க 62 பேர் இறந்து விடுகின்றனர் 100 ஆண்களில் இறப்பவர்கள் 42பேர் தான்.

## வரதட்சணை கொடுமை

பெண்களின் ஆயுட்காலம் இப்படி இருக்கிறதென்றால் அதற்கு ஆண்கள் முக்கிய காரணமாக இருக்கிறார்கள் ஆண்கள் பெண்கள் மீது தொடுக்கும் அநீதி அதை விட அதிகம். வரதட்சணைக் கொடுமையால் கொலையுண்டும் பெண்கள் இறக்கிறார்கள்.

அனைத்துலக பெண்கள் நல உரிமைக் கழகத்தினர் இந்தியாவில் நடத்திய ஓர் ஆய்வின் படி, வரதட்சனைக் கொடுமையினால் கொலையுண்ட பெண்கள் எண்ணிக்கை 6414 என்றும் ஆண்களின் இம்சைக்கு பலியாகி அவமானம் தாங்காமல் உயிரை விட்ட பெண்கள் 8432 என்றும் தெரிய வந்துள்ளது.

பெண்கள் படித்து, வேலை செய்து சம்பாதிக்கும் எவ்வகையான திறமை வாய்ந்தவர்களாக இருந்தாலும் கூட ஆண்களுக்கு தங்களையும் கொடுத்து வரதட்சனையும் கொடுக்க வேண்டிய நிலமையில் இருந்து இன்னமும் மாறவில்லை,

அந்த கொடுமையில் உயிர் விட்டவர்கள், உயிர் கொலை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை கணக்கில் அடங்காது

1985-ம் ஆண்டு பிப்ரவரி முதல் ஏப்ரல் முடிய டில்லியில் மட்டும் வரதட்சணைக் கொடுமையால் 12 பேர் மரணமடைந்துள்ளனர்.

1979-84 இடையில் 5 ஆண்டுகளில் டில்லியில் மட்டும் புதுமணப் பெண்கள் எரிப்பு சாவுகள் 2273 ஆகும். ஆனால் 12 கேஸ்களில் மட்டும் தான் சம்பந்தப்பட்டவர் சிலர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்குள்ளாகி இருக்கிறார்கள்.

மத்திய உள்துறை அமைச்சக அலுவலக தகவல்படி 1976ல் 2,670 பெண்களும், 1977ல் 2917 பெண்களும் நம் நாட்டில் நெருப்பு காயத்தில் உயிர்

மோகன்

துறந்துள்ளனர். இவர்களின் பெரும்பாலான மரணங்கள் சந்தேகத்திற்கு இடமாகவே அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

## கற்பழிப்பு:

வரதட்சனைக் கொடுமைகள் மட்டுமல்லாது பெண்கள் ஆண்களில் இச்சைப் பொருளாகப் பட்டு கற்பழிக்கப்படுகிறார்கள் அவர்களின் பொருளாதார நிலை, சாதி, அந்தஸ்து, வாழும் சூழ்நிலைகளைப்பயன்படுத்திக் கொண்டு அவர்களை கெடுத்து விடுகின்றனர்.

1982ம் ஆண்டு மார்ச், ஆகஸ்டு மாதங்களிடையே மட்டும் 244 அரிசனப் பெண்களும், ஆதிவாசிகளும் கற்பழிக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளதாக அப்போது

# நிலை:

இருந்த உள்துறை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

மத்திய பிரதேசத்தில் மட்டும் 50 அரிசனப்பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## விலைமகளிராக

இந்த கொடுமைகளோடு பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு விலைமகளிராகப் படுகிறார்கள்.

கடத்தி வரப்பட்டும், ஏழ்மையின் காரணத்தாலும், பலவகையில் கைவிடப் பட்டதாலும் இந்த நிலைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

1986 ஆகஸ்டு மாதத்தில் நைரோபியில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டில்

## குமார்

இந்தியாவிலுள்ள விலைமகளிர் பற்றிய கணக்கொன்று தரப்பட்டது.

அதன்படி பம்பாயில் 1 லட்சம், தில்லியில் 40 ஆயிரம், கல்கத்தாவில் 1 லட்சம், பூனாவில் 1 லட்சம், நாக்பூரில் 18 ஆயிரம் விலை மகளிராக உள்ளனர்.

இவர்களில் 25 விழுக்காடு கடத்தி வரப்பட்டவர்கள், ஏழ்மையில் விற்பனை செய்யப்பட்டவர்கள், வரதட்சணைக்காக கைவிடப்பட்டவர்கள்.

இதை விடக்கொடுமையான செய்தி 10 வயதுக்கும் 18 வயத்துக்கும் உட்பட்டவர்கள் தான் உலகம் முழுவதும் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்பது தான்.

இத்தொழிலில் ஈடுபடுகிற சூழ்நிலைகளில் பெரும்பாலானோர் இருப்பதற்கு படிப்பறிவில்லாதவர்கள் காரணம் என்று தெரிய வந்துள்ளது.

## படிக்காதவர்கள்

பெண்கள் கல்வியறிவில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1981-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி. நாடு முழுவதுமாக 77-8 சதவிகிதம் பெண்கள் கல்வியறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள்

சமுதாயக் கட்டுப்பாடுகளினாலும், குடும்பத்தின் பொருளாதாரச்சிக்கல் மற்றும் மூடநம்பிக்கைகள் காரணமாக 11 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்ட பெண்களில் 70 சதவிகிதம்பேர்கள் மழைக்குக் கூட பள்ளிக்கூடம் அருகே ஒதுங்காதவர்கள்.

15 வயதுக்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத பெண்களின் எண்ணிக்கை 1971ல் 17.53 கோடியாக இருந்தது 1981ல் 20-02 கோடியாக வளர்ந்துள்ளது,

ஏறத்தாழ 80 சதவிகிதம் மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்கள் இவர்களில் எழுதப்படிக்கத்தெரியாத கிராமப்பெண்கள் 80 சதவிகித 5 கிராமப்பெண்களில் ஒருவருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும்.

பள்ளிக்குச் செல்லாத பெண்களில் 6-10 வயதுக்குட்பட்டவர்களில் 45.67 விழுக்காடாகும் 11-14 வயதுக்குட்பட்டவர்களில் 75.68 விழுக்காட்டினரும், 15-17 வயதுக்குட்பட்டவர்கள் 85-96 விழுக்காட்டினரும் அடங்குவர்.

## படிக்கும் பெண்கள்

1961, 71, 81 ஆகிய ஆண்டுகளில் எழுதப் படிக்கத் தெரிந்த பெண்களின் மேற்படி வயதுப்படி எண்ணிக்கை முறையே 13-70; 18 70; 24-82 ஆகும். (ஆண்கள்: 34-14 39-82; 46. 69) விழுக்காடு கணக்கில் ஏதோ சிறிய முன்னேற்றம் கண்டு இருக்கிறது.

கடந்த ஆண்டுகளில் மருத்துவ கல்லூரிகளில் மாணவர்களைவிட மாணவிகளே அதிகமாக சேர்ந்துள்ளனர், நான் அமைச்சர் பதவி ஏற்று 5 வருடங்களுக்கு முன் மாணவ மாணவியர் சதவிகிதம் 50:50 என்று இருந்தது.

ஆனால் கடந்த ஆண்டு 60 சதவிகிதம் இடங்களை பெண்கள் கைப்பற்றியுள்ளனர் இது முன்னாள் சுகாதார நல அமைச்சர் சொன்ன தகவல்.

மருத்துவம், மட்டுமல்ல; சட்டம், பொறியியல், எலட்ரானிக்ஸ் முதலான பட்டப்படிப்புகளிலும் பயிலும் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

மாநிலங்கள் என்ற அளவில்' தமிழ்நாட்டில் 34. 12 விகிதம் தான் எழுத்தறிவுள்ள பெண்கள் இருக்கிறார்கள் அதிகம் உள்ள மாநிலம் கேரளம்தான் 64, 18 விகிதமாகும், ஆகக் குறைந்தது அருணாசல பிரதேசமாகும் இங்கு எழுத்தறிவுள்ள பெண்கள் 11. 02 விகிதம்தான.

# மார்ச் 8 அனைத்துலக பெண்கள் தினம்

ஏதோ பெண்கள் கல்வியில் சிறிய அளவில் முன்னேற்றம் பெற்றிருந்தாலும் எழுதப்படிக்க தெரியாதவர்களது மொத்த எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

## குழந்தைகளுக்கு துணையானது

பெண்களின் கல்வியறிவு அவர்களது குழந்தைகளின் வாழ்வுக்கு - நலனுக்கு மிகவும்

(8ம் பக்கம் பார்க்க)

## சூரிய வணக்கம்

என் வீட்டைச் சுற்றிலும்
பசுந்தளிர் முகங்கள்
மனம் குளிர்ந்து போனது
உரமிட்டு நீர் வார்த்தேன்

தீவிர செழிப்புடன்
மண்டி வளர்கையில்
பெருமிதம்-
தாங்க முடியாமற் போனது !

இப்போது-
மெல்ல மெல்ல என் மேனியில்
அரிப்பு; ரத்த வாடை...
அருகே மரணத்தின் சமிக்ஞை
எப்பவும் ஒருவகைக் கிலி...

வித்து மூலம் அறியாமல்
விஷப் பார்த்தீனியத்துக்கு
நாற்றங்கால் சமைத்துவிட்டு
இப்போது யாரை நொந்து கொள்ள ?

- சீபி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துணைப்புரிகிறது. பெண்கள் கல்வி குழந்தைகளின் வாழ்வுக்கு துணை நிற்கிறது என்பதை புள்ளி விபரங்கள் துல்லியமாக புலப்படுத்துகிறது.

எழுத்து வாசனை இல்லாதவர்கள் (1), ஆரம்பக்கல்வி முடிக்காதவர்கள் (2) ஆரம்பக் கல்விக்கு மேலே படித்தவர்கள் என்று பிரித்துக் கொண்டு ஒவ்வொரு ரகத்திலும் 1000 பேர் மத்தியில் கணக்கெடுக்கப்பட்டதில் இவர்களுக்கு பிறந்த குழந்தைகளில் (0 - 4 வயது முறையே (கிராமங்களில்) 145 பேரும், 101 பேரும், 71 பேரும் மரணமடைந்துள்ளனர். (நகரங்களில் இந்த விகிதாசாரம் முறையே 88 பேரும், 57 பேரும், 47 பேரும் மரணமடைந்திருந்தனர் என்பதை காட்டியுள்ளது.

## திறமையும் உரிமையும்

பெண்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டிலும், வாய்ப்பளிக்கப்படும் போது திறமைசாலிகளாகவே இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது ஆனால் இவர்களுக்கு அளிக்கப்படும் உரிமைகள் ....?

ஊதியமானாலும், சொத்தானாலும் மிகக் குறைவே உலக மக்கள் தொகையில் பெண்கள் வேலை, ஊதியம், சொத்து ஆகியவற்றின் விகிதாசாரம் இதை புலப்படுத்கிறது, பெண்கள் தொகை 50 சதவிகிதம் அலுவலகங்களில் 33 சதவிகிதம்; பெண்கள் செய்யும் மொத்தவேலை 66 சதவிகிதம் ஆனால் பெண்கள் பெறும் மொத்த ஊதியமோ 10 சதவிகிதம் தான் பெண்களின் சொத்துரிமையோ ஒரே ஒரு சதவிகிதம் தான் என புள்ளி விபரம் கூறுகிறது.

## உரிமை மறுப்பு

பெண்கள் முன்னேற்றம், சுதந்திரம் குறித்துப்பேசப் பட்டாலும் உரிமைகள் மறுக்கப் பட்ட வாயில்லாத பூச்சிகளாகவே ஒடுக்கி அடக்கப்படுகிறார்கள்.

---

முஸ்லிம்களின் திருமண முறிவுச்சட்டத்தின்படி (ஒரு ஆண் எந்தவிதக் காரணமும் காட்டாமல் தான் விரும்பும் போது தன் மனைவியை 'சலாக்' என்று கூறுவதன் மூலம் விவாகரத்து செய்துவிட முடியும் ஆனால் மனைவிக்கு அந்த உரிமை மறுக்கப் படுகிறது

உரிமை எல்லா சமுகங்களிலும், நாடுகளிலும் ஒவ்வொரு வகையில் இன்னமும் மறுக்கப் பட்டே வருகிறது. O

---

### நோய் தீர்க்கும் எளிய மருந்து:

# சிறுநீரகத்தில் கற்கள்

சிறு நீரகம் என்பது ஒரு நாளில் அருந்தும் நீர் முழுவதின் மூலம் இரத்தத்திலுள்ள உப்பைக் கரைத்து பிரித்து வெளியேற்றும் ஒரு கழிவுப் பாதையாகும்.

இந்த சிறு நீரகம் பாதிக்கும் போது, இரத்திலுள்ள உப்பு வெளியேற்றப்படாமல்போகும். இதனால் மனித உயிருக்கே ஆபத்து நேரிடும் சரிவர சிறு நீர் வெளியேற்றப்படா விட்டால் உடல் வீக்கம் காணப்படும். நாம் தினமும் போதிய அளவு நீர்பருகாமல் இருந்தால் சிறு நீரகத்தில் உப்புகள் ஒன்று சேர்ந்து ஒரு கல்போன்ற உருவ மாற்றம் அடைகிறது.

முதலில் சில நாட்களுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் கற்கள் எண்ணிக்கை பெருகும் போதோ அல்லது வளரும் போதோ சிறு நீரகத்திலிருந்து சிறுநீரை வெளியேற்ற வரும் குழாயை அடைத்துக் கொள்கிறது.

## அறிகுறிகள்

இந்த நோய்க்கு கீழ்கண்ட அறிகுறிகள் தென்படும்-

மிகவும் அதிகமான வலி இடுப்புக்கு கீழ் பின்புறம் தோன்றும் அடிவயிற்றில் வலி பரவும் ஆண்களுக்கு சிறுநீர் புற உறுப்பின் அடிபாகத்தில் வலி தோன்றும்.

சில சமயம் கல் அடைத்து கொள்ளும் போது அடிபாகத்தில் வலிதோன்றும். அல்லது இரத்தமோ சிறுநீரோ துளிகளாக வெளிப்படும்.

சிலசமயம் சிறுநீரக தொற்று இருக்கும் போதும் சிறுநீர் கழிப்பதில் வலி மற்ற கசிவுகள் இருக்கும்.

ஆண்களுக்கு ரெஸ்ட்ரேட் என்ற சுரபி உள்ளது இது வீங்கும் போதும் சிறுநீர் கழிப்பதில் சிரமம் இருக்கும் இவர்கள் டியூப் பொறுத்திக் கொள்ளலாம்.

## நீர் அருந்தல்

நின்று கொண்டு சிறுநீர் கழிக்காமல் படுத்துக்கொண்டு கழிப்பதால் இந்த கல் இடம் மாறவோ அல்லது வெளியேறவோ வாய்ப்புண்டு. எனவே இந்த முறை பயனளிக்காவிட்டால் சிறு அறுவை சிகிச்சை மூலம் கற்களை நீக்கி விடலாம். எனவே மேற்கூறப்பட்ட தொந்தரவு வராமல் இருக்கவேண்டுமானால் போதிய நீரை அருந்துவதே வழி. வந்த பின் தீர்க்க முயல்வதை விட வருமுன் காப்பதே சிக்கனமான வழியாகும்.

## கைகண்ட சிகிச்சை

சிறு நீர் கடுப்புக்கு சில கைகண்ட இலகுவான சிகிச்சைகள் உண்டு.

O சிறுநீரகழிப்பதில் பிரச்சனை இருந்தால் ஒரு அகல தொட்டியில் (பொறுக்கும் அளவில்) சுடுநீர் நிரப்பி அதில் அமர்ந்து கொண்டு சிறுநீர் கழிக்க முற்படலாம். இது ஒரு வழியாகும்.

O சிறுநீர் கழிப்பதில் சிரமம் இருந்தால் அடிவயிற்றில் மீது வெப்ப நீரை புட்டியில் நிரப்பி உருட்டலாம்.

O அப்படியும் சிரமம் இருந்தால் டியூப் பொருத்துவதே சரியான வழியாகும்.

பால்வினை நோய்களான கனோரியா அல்லது சிபிலிஸ் போன்ற வற்றால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சிறுநீர் கழிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

எனவே காரணத்தை அறிந்து அதற்கு சரியான முறையில் மருத்துவம் செய்வதே சரியான வழியாகும்.

வல்லாரை கீரை தினமும் சாப்பிட்டுவந்தால் இந்த சிறு நீரக தொந்தரவு இருக்காது. இதற்கு சிறுநீரக கற்களை கரைக்கும் தன்மை உண்டு.

அடுத்த இதழில் வயிற்று சம்பந்தப் பட்டவற்றைப் பார்ப்போம். O

---

## தாயகம் திரும்பி ,...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்முடன் சம்பந்தப்பட்டவைபய என்ற உணர்வுடன், இவர்களின் போராட்டங்கள், பிரச்சனைகள் அனைத்திலும் கலந்து கொள்ளத் தூண்ட வேண்டும். அதைவிட்டு, பிழைப்புக்காக தாயகம் திரும்பியவர்களின் பெயரால், தொடர்ந்து அழைப்புகளை கட்டுவதும் பொதுப் பிரச்சனைகளிலிருந்து அவர்களைத் திசை திரும்பி நிற்கச் செய்வதும் தவறானதாகும். தாயகம் திரும்பிய மக்களுக்கான அமைப்புகள் இதை உணர்ந்து செயல்பட வேண்டும். தாயகம் திரும்பிய மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்காக உள்ளூர் மக்களின் ஆதரவைத் தேடுவதும், அவர்களின் பிரச்சினைகளுக்காக தங்களின் முழு ஒத்துழைப்பை நல்குவதும் இந்த ஐக்கியப்படு தலைத் துரிதப்படுத்தும்.

மற்றபடி, தாயகம் திரும்பிய மக்கள் இந்த தமிழ் சமுதாயத்தோடு தன்னிச்சையாகவேதல் தவிர்க்க முடியாதது. காலம் சற்று அதிகம் தேவைப்படலாம் அவ்வளவே. O

# கல்வி கற்க விரும்புகிறவர்களுக்கு
# ஆலோசனைகள் - தகவல்கள்

பள்ளியில் சேர்ந்தோ அல்லது சுயமாக கல்விகற்க விரும்புகிறவர்களுக்கு இது ஏற்ற நேரம்.

கல்வி ஆண்டு முடிந்து அடுத்த கல்வி ஆண்டு ஆரம்பிக்கப் போகிறது. இந்த கால வேளையில் தான் பள்ளியில் சேரலாம். பயிற்சியிலும் சேரலாம். கல்வி நிலையங்கள் விண்ணப்பங்கள் கோருவதோடு **மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளும்.**

கல்விகற்க வேண்டும் பயிற்சிகள் பெற வேண்டும் என்று மாணவர்கள் மட்டுமல்ல பள்ளியில் சேர்ந்து படித்திடாத இளைஞர்கள், வாய்ப்பு வசதியில்லாமல் ஏதாவது வேலையில் இருப்பவர்கள் விரும்பலாம்-முயலலாம்.

அவர்கள் தங்கள் கல்வித் தகுதிக்கு ஏற்றபடி. வசதி வாய்ப்புக்கு தக்கப்படி, முழு நேரமோ, பகுதி நேரமோ, வேலை ஒழிந்து வேளைகளிலோ தாம் விரும்பிய கல்வியை பயிலலாம். பயிற்சிகளைப் பெறலாம்.

இங்கு இருப்பவர்கள் மட்டுமல்ல-

கடல் கடந்த நாடுகளிலிருந்து இலங்கை, பர்மா, வியட்நாம் யிலிருந்து 'நாடு திரும்பியவர்கள்' மட்டுமல்ல-பிறரும் இந்த படிப்பு,பயிற்சி வாய்ப்புகளைப் பெறலாம்,

தாயகம் திரும்பியவர்கள் தமது வாழ்க்கையை இங்கு அமைத்துக்கொள்வதில் எதிர் நீச்சல் போடுகிறார்கள். தாம் படும் அவஸ்தையில் வறுமையில்தமது பிள்ளைகளை படிக்க வைக்க முடியாத திணறுகிறார்கள் அவர்கள் படிப்பதற்கு ஆசைஇருந்தும் இந்த நாட்டில் இலவசமாக உதவிகள் பெற்றும் படிக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தும். தெரியாத அறியாத காரணங்களால் அந்த வாய்ப்புகளை தவற விடுகின்றனர். வளர்ந்தவர்கள் கூட 'காலங் கடந்து விட்டது' என்று படிக்கும் முயற்சியை விட்டு விடுகின்றனர். பலருக்கு ஆசை இருந்தும், குடும்ப சூழ்நிலைகள் - பொருளாதார சூழ்நிலைகளால் படிக்கமுடியாமல் போகிறது.

வேலை செய்துக் கொண்டே வீட்டில் இருந்துக் கொண்டே படிக்கும் வாய்ப்புகள், தமது ஆரம்பக் கல்வியை கற்காவிட்டாலும் - எழுத வாசிக்கத் தெரிந்திருந்தால் உயர் கல்வி பயிலலாம் என்ற வாய்ப்புகள் இருக்கிறது என்று அறியாத - தெரியாத காரணத்கால் அந்த ஆசையை நிறைவேற்ற முடியாது இருப்பவர்களும் இருக்கிறார்கள்.

அது போன்று கல்வி கற்க பயிற்சிகள் பெற ஆசை படுகிறவர்களுக்கு, முயற்சிகள் மேற்கொள்கிறவர்களுக்கு வழி காட்டுவதே இந்தகட்டுரையின் நோக்கமாகும். இந்த கட்டுரையில் முடிந்த வரையில் பல தகவல்களையும், ஆலோசனைகளையும் பெறலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறாம்.

முதலில் உங்களுக்கு நாங்கள் தரும் ஆலோசனை அறிவுரை, தவறாது பத்திரிகைகள் படியுங்கள் என்பது தான்.

காரணம் இனி வரும் மூன்று, நான்கு மாதங்களில் தினசரி பத்திரிகை மற்றும் வார, மாத ஏடுகள் கூட பல தகவல்களை தாங்கி வரும்.

நடப்பு கல்வி ஆண்டு முடிந்து புதிய கல்வி ஆண்டு தொடங்கப் போவதால் கல்வி, பயிற்சி சம்பந்தப்பட்ட பல்வேறு விளம்பரங்கள் வெளிவரும்.

இந்த விளம்பரங்கள் மூலம் பலவகையான கல்வி மற்றும் பயிற்சிக்கான தகவல்களையும், விபரங்களையும் பார்க்கலாம்

அந்தந்த கல்வி - பயிற்சிக்கு என்ன தகுதி வேண்டும்; எங்கே கற்கலாம்; எப்படி விண்ணப்பிக்க வேண்டும் என்பது போன்ற பல விபரங்களை தாங்கி வரும்.

ஆகவே தவறாது தினமும் பத்திரிக்கையைப்பார்ப்பதோடு அதில்வரும் விளம்பரங்கள் கவனமாக பார்க்கவும்.

அடுத்து, பயனுள்ள விபரங்களை அடுத்த இதழில் தருவோம் தொடர்வோம். O

## படிப்புதவி பெற நீங்களும் விண்ணப்பிக்கலாம்

இந்திய அரசின் கல்வி அமைச்சகம் படிப்புதவித்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் தங்கிப்படிக்கும் மாணவ மாணவியருக்கு உதவி அளித்து வருகிறது. 1987-88 ஆண்டுக்கான படிப்புதவி வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இது குறித்து வந்த விளம்பரத்தை உங்கள் கவனத்திற்கு வெளியிடுகிறோம். இந்த படிப்புதவி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள கடந்த பெப்ரவரி பிற்பகுதியில் தமிழ் தினசரியில் வெளிவந்த அந்த விளப்பரத்தை அப்படியே பிரசுரிக்கிறோம்.

### படிப்புதவி

அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு இந்திய அரசின் கல்வி அமைச்சகம் அளிக்கும் படிப்புதவித் திட்டம் 87 88 (Government of India - Scheme of Scholarships in Approved Residential Secondary Schools 1987-88).

### முதுனிலைத் தேர்வு

மேற்காண் படிப்புதவிக்காக நடத்தப்படவிருக்கும் முதனிலைத் தேர்விற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் மாணவ, மாணவியர் தமிழ்நாட்டில் வசிப்பவராயும் 1. 10 87 அன்று 11 வயது நிறைந்தவராயும் 13 வயது நிரம்பப் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் பெற்றோர்களின் மாத வருமானம் (வருமான வரிக்கு அளிக்கப்படும் சலுகைகள் போக) ரூ 500-ம் அதற்கு குறைவாயும் இருத்தல் வேண்டும். முதனிலைத் தேர்வு 9. 7. 87. அன்று குறிப்பிட்ட மாவட்ட மையங்களில் நடைபெறும். விண்ணப்பங்களையும் மற்றைய விவரங்களையும் மாவட்டக் கல்வி அலுவலருடனோ அல்லது முதன்மைக் கல்வி அலுவலருடனோ தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தினை பெற வேண்டிய கடைசிநாள் 15.4 87. பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை நிர்வாக அலுவலர், பள்ளிக் கல்வி அலுவலகம், கல்லூரி சாலை, சென்னை-6 என்ற முகவரிக்கு அனுப்புவதற்குரிய கடைசி நாள் 15. 5. 87. காலம் கடந்து வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது,

-பள்ளி கல்வி இயக்குனர்

# தோட்டப் புறத்து (நாட்டுப்) பாடல்களில் காதல் சுவை

## ( 7 )

ஆணும், பெண்ணும் காதல் கொண்டு கருத்தொருமிப்பது ஒரு புறமிருக்க, ஒரு தலைப்பட்சமாக காதல் கொள்வதும் உண்டு. கைக்கிளை என்ற ஒரு தலைக்காதலில் அவதிப்படுவதும் உண்டு. சிலவேளை இந்த ஒரு தலைக் காதல் வன்மையிலும், பலாத்காரத்திலும் இறங்கு வில்லத்தனங்களிலும் ஈடுபாட்டை ஏற்படுத்திவிடுவது முண்டு.

''காலுசட்டை மேலு சட்டை
உள் கமுசு வசு கோட்டு
அந்த தங்க உருலோசும்
என் அங்கம் பறிக்குதடி''

என ஒருத்தி ஒருவனின் தோற்றதில் உள்ளம் உருகுகிறாள்.

ஒரு தலையாக காதல்கொண்டு ஏங்கும் ஏக்கப்பெரு மூச்சு விடும் காட்சிகளை தோட்டப்புறங்களில் நாட்டுப்புற பாடல்கள் மூலம் காணலாம்.

மலையிலே தேயிலைக் கொழுந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் பெண்கள். அவளும் கொழுந்துப்பறிக்கிறாள்.

அவர்களுக்கு வேலைப்பார்க்கும் கங்காணி அவளையே சுற்றி சுற்றி வருகின்றான் பேச்சும் கொடுக்கிறான். பேச்சோடு பேச்சாக கண்ணையும் சிமிட்டுகிறான் -

அவளோ துடுக்குக்காரி; வெடுக்கென்று கேட்கிறாள் -

''சுண்ணாம்பு டப்பிக்கட்டி
சுத்தவர கங்காணி
கையிலே சொண்ட எடுத்து
கண்ணடிக்கிற தென்னாநீ''

துடுக்குத்தனத்தோடு குறும்பும் போகவில்லை. அவன் கட்டி இருக்கும் கடிகாரத்தை 'சுண்ணாம்பு டப்பி' என்றுகேலியும் செய்து கேட்கிறாள்.

''மஞ்சலத்தி மரத்துக்குள்ளே
வயது கொண்டிருக்கையிலே
துள்ளி வீசக்காரன் வந்து
ஆட்டுறான்டி வெள்ளி ரூவா''

என்று தன்னைப் பார்த்து குறும்பு செய்யும்- காசை சுண்டிக் காண்பிக்கின்ற ஒரு துள்ளி மீசைக்காரனைப் பற்றி சொல்கிறாள்.

காட்டுத் தொங்கலே கொழுந்தெடுப்பு. கண்டக்டர் வருகிறான் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறான் இன்றைக்கு மட்டுமா? எப்போதும் இப்படித்தான் இவன் -

''காட்டுத் தொங்கலிலே கண்டாக்கு;
கட்டத்தோக்கு தோளுமேலே
எந்த நேரம் பார்த்தாலும்-அவரு
நெனவு என்மேலே''

(வேறு)

''காட்டுத்தொங்கலிலே கண்டாக்கையா
தோக்கு தோல் மேலே
குருவி சுடயில கண்டாக்கு
குறிப்பு எம் மேலே''

அவளுக்காக மாமன் மகன் காத்திருக்கிறான். மாலைப் போடவும் தயாராக இருக்கிறான், அப்படி இருக்க வழியிலே போகிறவன் மாப்பிள்ளையாக வர துடிக்கலாமா ?

மாமன் மகனிருக்க
மாலைப்போட சாமி இருக்க
வழியிலே வந்த பயல்
மாப்புள்ளையா வந்த தென்ன?,'

அவளுக்கு ஆத்திரம், கடலைப்பருப்பு மாதிரி இருக்கிறார்கள், நேற்று முளைத்தவர்கள். அவர்கள் தன்னைப்பிடிக்க சுற்றி சுற்றி வருவதா?

''கடல பருப்பு போலே
வெடல பய ரெண்டு பேரு
கண்ணி வச்சு திரியுறாண்டி
என்ன புடிப்பதுக்கு''

வெள்ளை வேட்டி கையில் கடிகாரம். எப்போது பார்த்தாலும் நிற்பது 'ரோட்டு தொங்கலில்! அவனைப்பார்க்கின்ற போதெல்லாம் அவளுக்கு மனதுக்குள் நெருப்பு பிடிக்கிறது-

''கட்டுறது வெள்ள வேட்டி
கையிலொரு உருலோசு
நிக்கிறது ரோட்டு தொங்க - எனக்கு
நெருப்பாப் பிடிக்குதய்யோ?''

(குறிப்பு: உருலோசு - கடிகாரம்)

அவளுக்கும் தனக்கும் என்ன உறவு? எந்த தொடர்பும் இல்லை. தற்செயலாக அன்றைக்கு அவளிடம் சுண்ணாம்பு கேட்டுப் போட்டது தப்பாக போய்விட்டது. தோட்டம் முழுவதும் தன் பேர் அடிப்பட வைத்து விட்டாள் -

' தேனூரன் '

''சுத்து கம்பி சேலைக்காரி
சூதுக்கார வெள்ளையம்மாள்
சுண்ணாம்பு கேட்டதுக்கு
தூத்திட்டாளே தோட்டமெல்லாம்''

அவனுக்கு அவள் மீது காதல். ஆனால் அவள் அவனை ஏறெடுத்தும் பார்க்கிறாளில்லை. தன் ஆசையை எத்தனையோ முறை வெளியிட்டும் பார்த்து விட்டான். ஆனால் அவளுக்கு சம்மதமில்லை- அவன் மீது காதலில்லை-

''கேட்டேன்டி ஒன்னே
கெஞ்சினேன்டி நெஞ்சுருக
மாட்டேன்னு சொன்னியடி-ஒன்னே
மாடசாமி கேக்காதோ''

அவளது அலட்சியம், மறுப்பு அவனுக்கு வெறுப்பை மூட்டுகிறது. மாடசாமியைக்கூட துணைக் அழைக்கிறான். சபிக்கிறான்.

ஒரு நாள் அவளிடம் பேச வேண்டும் என்று துடிக்கிறான். நல்ல நிலா வொளி. வீட்டுக்கு வெளியே வந்து நிற்கிறான்.

அவளோ கதவை இழுத்துத்தள்ளி மூடிவிடுகிறாள்.

''நல்ல நிலா வெரிக்க
நானும் வந்து வெளியே நிக்க
தள்ளி கதவடைக்க
சம்மதமோ ஒன் மனசு.

அவன் ஒருதலை காதலில் மூழ்கி துயருகிறான்.

(தொடரும்)

# உங்களுக்கோர் தகவல்

## ஹோட்டல் நிர்வாகம், விருந்தியல் கலை பயிலுவதற்கு விண்ணப்பிக்கலாம்

அகமதாபாத், பெங்களூர், போபால், புவனேஸ்வரி, பம்பாய், கல்கத்தா, டெல்லி, கோவா, ஹைதராபாத், லக்னோ சென்னை, சிறிநகர் இடங்களிலுள்ள ஹோட்டல் நிர்வாகம் மற்றும் விருந்தியல் கலை நிறுவனங்களில் (INSTITUTES OF HOTEL MANAGEMENT & CATERING TECHNOLOGY) ஹோட்டல் நிர்வாகம், விருந்தியல் கலை மற்றும் சத்தூட்ட உணவு (DIPLOMA COURSE IN HOTEL MANAGEMENT, CATERING TECHNOLOGY & APPLIED NUTRITION) என்ற பிரிவில் 3 ஆண்டு டிப்ளமா வகுப்பில் சேர்ப்பதற்கான நுழைவுத் தேர்வுக்காக டெல்லியிலுள்ள ஹோட்டல் நிர்வாகம் மற்றும் விருந்தியல் கலைக்கான தேசிய கவுன்சில் (NATIONAL COUNCIL FOR HOTEL MANAGEMEMT AND CATERING TECHNOLOGY) தகுதியுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

தகுதி: பிளஸ்டு (10 + 2) வில் குறைந்தது 50 % (SC/STக்கு 45 %) மதிப்பெண்கள் பெற்று தேறியிருக்க வேண்டும். (1986-87ல் பிளஸ்டு பரீட்சை எழுதுபவர்களும் விண்ணப்பிக்கலாம் ஆனால் இவர்கள் 15.7.87 தேதிக்குள் தாம் பரீட்சையில் தேறியதற்கான சான்று காட்ட வேண்டும்.) வயது: 17.7.87 அன்று 22 வருடங்கள் பூர்த்தியாகியிருக்க வேண்டும். (SC/ST க்கு 25 வருடங்கள்)

விண்ணப்பத்துடன் ரூபா 70- (SC / STக்கு ரூபா. 17)க்கான குறுக்குக் கோடிட்ட டிமாண்ட் டிராப்ட் ஒன்று அனுப்ப வேண்டும்.

CHIEF EXCUTIVE OFFICER,
NATIONAL COUNCIL FOR HOTEL MANAGEMENT TECHNOLOGY,

POST BOX NO. 432,
NEW DELHI G.P.O.,
NEW DELHI

விண்ணப்பம் கிடைக்க வேண்டிய கடைசிநாள்: 28.3.87

மாதிரி விண்ணப்பாரத்துக்கு 28-2-87 தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து, தினமணி ஆகிய நாளிதழ்களைப் பார்க்கவும்.

Statement about Ownership & other Particulars regarding the Newspaper MAKKAL MARUVAZHVOO

[FORM IV] (See Rule 8)

1. Place of Publication: Madras-600094
2. Periodicity of Publication : Monthly
3. Printer's Name : L. S. Srinivasan
   Nationality : Indian
   Address : Jai Kalidass Press
   : 29, B.E. Colony, 4th Street, Madras - 600 024.

4, 5. Publisher's & Editor's Name : T. S. Raju
   Nationality Indian
   Address : 1, South Gangaiamman
   : Kovil IInd Street, Madras-94.
6. Names & address of individuals who own the newspaper and partners or share holders holding more than one percent of the total capital. T. S. RAJU above address

I, Raju hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) T. S RAJU
Signature of publishers

28-2-87

## தூத்துகுடி...

(கடைசி பக்கத் தொடர்ச்சி)

படாமல் இருப்பவர்கள் சம்பளப் பிரச்சனை, பலர் செய்யும் தாயகம் திரும்பியோர்களின் வீட்டுப் பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. தேனியில் உள்ள கூட்டுறவு மில் தொழிலாளர்களுக்கு கட்டி இருப்பது போல வீடுகள் கட்டிக்கொடுக்க ஓர் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடப்பட்டது.

மதுரை அங்கப்பா நூற்பாலையில் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ள இரண்டு தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வேலை வழங்க மறுத்து வருகிறது. அங்கு சம்பளம் சரியாக வழங்குவதில்லை; வேலை ஒழுங்காக கொடுப்பதில்லை என்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இவை சம்பந்தமாக கவனிப்பதாக நிர்வாக இயக்குனர் உறுதியளித்தார்.

காண்டிரக்காரர்கள் மூலம் கட்டப்பட்ட தாயகம் திரும்பியோர்கள் வீடுகள் பல முழுமை பெறாமல் இருக்கின்றனர்; பலர் ஏமாற்றப்பட்டார்கள். இப்படி முழுமை பெறாத வீடுகளை சில நிறுவனங்கள் கட்டிக்கொடுப்பதாக முன் வந்துள்ளன. இதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன எனவும் இனிமேலும் தாயகம் திரும்பியோர்கள் ஏமாற்றப்படுவதை அனுமதிக்கக் கூடாது எனவும் இதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்றும் வங்கி நிர்வாக இயக்குனரும், மறுவாழ்வு துறை இயக்குனர் உறுதியளித்தார்.

-பி. பழனியாண்டி
-பி வி. சிவசாமி

Editor & Publisher : T. S. RAJU, 1, South Gangai amman koil 2nd Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 26, B E Colony, 4tn Street, Madras.

# போட்டி

## மக்கள் மறுவாழ்வு

### 5வது ஆண்டை-யொட்டி நடத்தும் கதை - கட்டுரை - கவிதை போட்டிகள்

**ஒவ்வொரு போட்டிக்கும் முதல், இரண்டாவது பரிசுகள்**

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூபா 100. |
| இரண்டாவது பரிசு | ரூபா 50. |

**நிபந்தனைகள் :**

- தாயகம் திரும்பியோர் வாழ்க்கையை-பிரச்சனைகளை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- சிறுகதை, கட்டுரை மக்கள் மறுவாழ்வில் ஒன்றரை பக்கங்களுக்கு மேல் போகக் கூடாது, கவிதை 40 வரிகளுக்கு மேல் செல்லக்கூடாது.
- படைப்புகள் சொந்த கற்பனையாக இருக்க வேண்டும் இதற்குமுன் எந்த பத்திரிகையிலும் பிரசுரமாகாததாக இருக்க வேண்டும்.
- போட்டியில் தேர்ந்தெடுக்கப்படாத படைப்புகளை திரும்பப் பெற உரிய அஞ்சல் தலைகளை அனுப்ப வேண்டும்.
- போட்டிக்கான கதை, கட்டுரை, கவிதைகள் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: **25-3-87**

அனுப்ப வேண்டிய முகவரி :

**போட்டி**
மக்கள் மறுவாழ்வு
அஞ்சல் பை எண்: 5560
சென்னை 600 094.

# மலையக எழுத்தாளருக்கு 20 வருட சிறைத் தண்டனை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ், இலங்கை அரசு மலையக எழுத்தாளர் ஒருவருக்கு 20 வருட சிறை தண்டனை அளித்துள்ளது,

மலையக எழுத்தாளரும், மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி வேலைகளில் ஈடுபட்டு வந்தவருமான பி.ஏ. காதர் அவர்ளுக்கு இந்த கொடுரமான தண்டனையை அளித்துள்ளது.

மலையகத்தில், ஆள்கரனோயாவை (ராகலை)ச் சேர்ந்த காதரின் தந்தை ஒரு சிறு வியாபாரி. ஆசிரியராக பணி செய்த காதர் மலையக மக்களின் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் மலையக மக்களின் விடுதலைக்காக பாடுபட்டதோடு இவர் ஈழமக்கள் விடுதலை போராட்டத்திலும் தன்னை இணைத்துக்கொண்டவர்.

1983 யில் 'சுட்டெரிக்க ஜூலை 7 நாட்களில்' மலையகத்தில் பதுளை நுவரெலியா போன்ற பகுதிகளில் நடந்த முக்கிய சம்பவங்களை ஆதாரப் பூர்வமாக தொகுத்து வெளி வந்த நூலான 'SRI LANKA: JULY 1983 VIOLENCE AGAINST 'INDIAN TAMILS' அவரது ஆய்வே,

மலையகத் தொழிலாளர்கள் பிரச்சனைகள் குறித்தும சில நூல்கள் எழுதியிருக்கிறார். 'மலையகத்தமிழர் எதிர்காலம்' 'மலையகத் தொழிலாளர் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்' மேதினப்படிப்பினைகள்' முதலானவைகள் இவர் எழுதியவையே.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கைது செய்யப்பட்டார்.

போராளிகள் பற்றிய இரகசிய தகவல்களை தர மறுத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு இக் கொடிய சிறை தண்டனையை விதிக்கப்பட்டுள்ளார்,

சுமார் முப்பது வயது நிரம்பிய இளைஞரான இவருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனை அளித்திருப்பது அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

# தூத்துக்குடியில் வங்கி கூட்டம்

"இனிவரும் தாயகம் திரும்பியோர்களுக்கு நேரடியாக வியாபாரக்கடன் கொடுப்பதற்கு பதிலாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் குறிப்பிட்ட தொகையினரை அனுப்பி வட்டார வளர்ச்சி அலுவலகர் (B.D.O) மூலம் கடனுதவியை அளித்து சுயவேலைவாய்ப்பில் ஈடுபட ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது"

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் டெலிகேட்கள் கூட்டமொன்று 12. 1. 87 அன்று தூத்துக் குடியில் நடைபெற்ற போது வங்கி நிர்வாகி திரு. பழனிச்சாமி தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு சிதம்பரனார்மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆறுமுகம் இ.ஆ.ப. தூத்துக்குடி துணைக் கலெக்டர் திரு. மீனாட்சி ராஜகோபால், மற்றும் சிதம்பரனார், மதுரை, புதுக்கோட்டை மாவட்ட வங்கியின் டெலிகேட்டுகள் கலந்துக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், தூத்துக்குடி கூட்டுறவு நூற்பாலையில் பணி செய்யும் தாயகம் திரும்பிய தொழிலாளர்களில் 5 ஆண்டுகள் மேல் ஆகியும் சம்பள உயர்வு, நிரந்தரம் அளிக்கப்

(11-ம் பக்கம் பார்க்க)